**கிளினிக் B2B**
டான் டோக் செங்
மருத்துவமனை மெடிக்கல்
சென்டர், B2 மாடி
தொடர்புக்கு:
6357 7000 (மைய தொடர்பு)

தகவல்களை அணுக கைத்தொலைபேசி வாயிலாக QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள் அல்லது இந்த இணையதளத்தை நாடுங்கள்:
http://bit.ly/TTSHHealth-Library

இந்த தகவல் பயனுள்ளதாக இருந்ததா? படித்ததையொட்டி உங்களுக்கு ஏதேனும் கருத்து இருந்தால் தயவுசெய்து patienteducation@ttsh.com.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்

Tan Tock Seng HOSPITAL
National Healthcare Group

© டான் டோக் செங் மருத்துவமனை, 2020. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. மே 2020 நிலவரப்படி அனைத்து தகவல்களும் சரியானவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியும் டான் டாக் செங் மருத்துவமனையின் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கப்படவோ, நகலெடுக்கவோ, தலைகீழ் தொகுப்பாக்கப்படவோ ,  தழுவப்படவோ விநியோகிக்கப்படவோ, வணிக ரீதியாக சுரண்டவோ, தரவுத்தளத்தில், மீட்டெடுக்கும் அமைப்பில் காட்டப்படவோ  சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அனுப்பவோ கூடாது.

PECC-END-ED-2020-825T-v1

Tan Tock Seng HOSPITAL

## உட்சுரப்பியல் துறை

# ஒற்றை வயல் இன்சுலின் ஊசி
## ஊசியை தயார் செய்யும் மற்றும் சேமிக்கும் வழிமுறைகள்



## படி1: தயாராகுங்கள்



A. கைகளை சுத்தம் செய்து கொள்ளவும்.



B. தேவையான பொருட்களை ஒன்றினைத்துக் கொள்ள வேண்டும்.
இன்சுலின் பாட்டிலின் காலாவதி தேதியை சரிபார்க்க வேண்டும்.
பாட்டிலை, திறந்த 4 வாரங்களுக்கு பின்னர் அல்லது உற்பத்தியாளரின் வழிமுறைகளுக்கேற்ப இரண்டில் ஏதேனும் ஒன்றின் படி நிராகரிக்கவும்.



C. புதிய பாட்டிலை உபயோகிக்கும் பொழுது தேதியை எழுதவும்.



D. பாட்டிலின் உள்ளெ மேகமூட்டம் போல் காணப்படும் இன்சுலின் கலவை அதாவது இன்சுலின் பாட்டிலை உள்ளங்கைகளுக்கு இடையில் வைத்து குறைந்தது 10 முறையாவது உருட்டினால் மட்டுமே அந்த கலவை நன்றாக கலங்கும்.
இன்சுலின் பாட்டிலைக் குலுக்கக் கூடாது.



E. ஸ்பிரிட்டை வைத்து பாட்டிலின் ரப்பர் பாகத்தை சுத்தம் செய்ய வேண்டும்.

## படி 2: காற்றை செலுத்துங்கள்



A. இன்சுலின் அளவிற்கேற்பக் காற்றை சிரஞ்சினில் எடுக்கவும்.



B. இன்சுலின் பாட்டிலை நேராக வைத்து ஊசியை அதனுள் செலுத்தி காற்றினை பாட்டிலினுள் செலுத்தவும்.

## படி 3: இன்சுலின் வரையவும்[எடுக்கவும்]



A. இரண்டாவது முறைப்படியிலிருந்து 2, சிரிஞ்சை அகற்றாமல், பாட்டில் மற்றும் சிரிஞ்சை தலைகீழாக சாய்த்து உங்கள் கண் நிலைக்கு கொண்டு வாருங்கள்.
தேவையான அளவு தெளிந்த இன்சுலினை எடுத்துக் கொண்டு சிரஞ்சை அகற்றவும்.



B. கருப்பு ரப்பர் வளையத்தின் மேலிருந்து படிக்கவும் (அம்புக்குறியைக் காண்க).
காற்று குமிழ்களை [முட்டைகளை]சரிபார்க்கவும். அப்படி இருந்தால், மேலே குமிழ்களை[காற்று முட்டைகளை] நகர்த்த சிரிஞ்சை மெதுவாகத் தட்டவும்.
குமிழ்களை வெளியேற்ற உலக்கை[சிரிஞ்சின் தண்டை] மெதுவாக அழுத்துங்கள்.

## படி 4: இன்சுலினை எங்கே செலுத்துவது

பொதுவாக ஊசி அடிவயிற்று பகுதியில் தான் செலுத்தப்படும். தொப்புளிலிருந்து 2 விரல் அளவு தூரத்தில் ஊசியை செலுத்தவும் (2.5 இருந்து  5 சென்டிமீட்டர்).
ஒவ்வொரு ஊசி முந்தைய தளத்திலிருந்து (சுமார் 2 முதல் 3 செ.மீ வரை) 2 விரல்கள் இடைவெளியில் இருக்க வேண்டும்.
<u>ஒரே தளத்தில் இன்சுலினை  மீண்டும் செலுத்த வேண்டாம்.</u>




## படி 5: இன்சுலினை செலுத்துவது எப்படி





A.  இன்சுலின் எடுத்துக் கொள்ளும் இடத்தை ஸ்பிரிட் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

B. ஊசியை செலுத்தக்கூடிய இடத்தில் ஒரு மடங்கு தோலைக் கிள்ளுங்கள்.
சிரிஞ்சை மறுபுறம் பென்சில் போல பிடித்துக் கொள்ளுங்கள். ஊசியை $90^0$ கோணத்தில் செலுத்த வேண்டும்.
சிரிஞ்சின் உலக்கையை  உலக்கை உள்ளே தள்ளுங்கள்.
சிரிஞ் எடுப்பதும்  மற்றும் தோலை கிள்ளி பிடித்த இடத்தையும்,  விடுவிப்பதும்  ஒரே சமயமாக இருக்கட்டும்.

C. ஊசி இட்ட இடத்தை 5 விநாடிகள் விரல்களை வைத்து மென்மையாக தேய்க்கவும்.
<u>இன்சுலின் செலுத்தப்பட்ட இடத்தை அழுத்தி தேய்க்கக் கூடாது.</u>

## படி 6: அகற்றல் மற்றும் சேமிப்பு



A. உபயோகப்படுத்திய ஊசியை கடினமான நெகிழி கொள்கலனில் எறிந்துவிடவும்.
<u>ஒருமுறை உபயோகப்படுத்திய ஊசியை மீண்டும் உபயோகிக்காதீர்கள்.</u>



B. <u>திறந்த</u> இன்சுலினை சூரிய ஒளி படாதவாறு குளிர்ந்த வறண்ட பகுதியில் வைக்கவும்.
<u>உபயோகப்படுத்தாத</u> இன்சுலினை குளிர்சாதன பெட்டியில் வைக்க வேண்டும்.